## போராட்டத்தை அரசியலாக பார்க்கவில்லை!

# சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தை கைவிட வேண்டும்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

**சென்னை,அக்.11–**

**“முதல்வரின் தலைமையிலான இந்த அரசு, தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் பாதுகாக்கும் அரசாக தான் இருக்கின்றது. அதே வேளையில் தொழிற்சாலைகளும் மனநிம்மதியுடன் தொழிலை நடத்தும் உகந்த சூழலை உருவாக்கும் கடமையும் பொறுப்பும் இந்த அரசிற்கு உள்ளது.” சென்னை, தலைமை செயலகத்தில் நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசு செய்தியாளர்களை சந்தித்தார்.**

**அவர் தெரிவித்ததாவது;**

சாம்சங் தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகள் குறித்து நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் தொழில்துறை அமைச்சர் விரிவாக எடுத்து சொல்லியுள்ளார். முதல்வர் தனிப்பட்ட முறையில் இந்த விவகாரத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, மூன்று அமைச்சர்கள் அடங்கிய குழுவை அமைத்து அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

இந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் தொழிலாளர்களின் நலனை முழுமையாக காக்க வேண்டும். அதே நேரம் நம் மாநிலத்தில் இருக்கும் படித்த இளைஞர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்புகளை பெற்று தர வேண்டும் என்ற அக்கறையுடன் அரசு ஆரம்பம் முதலே இந்த பிரச்சனையை அணுகி வந்துள்ளது. சாம்சங் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனை கருதி, தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை சார்பாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் மற்றும் பேச்சுவார்த்தையின் பயனாக தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க சாம்சங் நிறுவனம் முன்வந்துள்ளது.

பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில், மிக முக்கியமான கோரிக்கைகளை சாம்சங் நிறுவனம் பேச்சுவார்த்தைக்கு வந்த தொழிலாளர்களோடு பேசி அதற்கான ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளார்கள்.

அதன்படி, மாத ஊதியத்துடன் சேர்த்து மாதம் தோறும் சிறப்பு ஊக்கத்தொகையாக 5 ஆயிரம் ரூபாய் அக்டோபர் முதல் தேதியில் இருந்து கூடுதலாக வழங்கப்படும், பணியின் போது தொழிலாளி இறக்க நேரிட்டால் தொழிலாளியின் குடும்பத்திற்கு உடனடியாக 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும், அனைத்து தொழிலாளர்களுக்கும் குளிரூட்டப்பட்ட பேருந்து வாகனம் ஏற்பாடு செய்யப்படும், தற்போது வழங்கப்படும் விடுப்புடன், குடும்ப நிகழ்வு விடுமுறை வழங்கப்படும் போன்றவைகளை நிறைவேற்றி சாம்சங் நிறுவனம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

திருப்பெரும்தூர் சாம்சங் ஆலையில் இருக்கும் சி.ஐ.டி.யு அமைப்பு, அந்த நிறுவனத்துடனான பதிவு குறித்து தற்போது போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், அந்த முடிவின் அடிப்படையில் தான் தொழிலாளர் நலத்துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். நீதிமன்ற தீர்ப்பை தொழிலாளர் நலத்துறை நிச்சயம் நிறைவேற்றும். இதை சி.ஐ.டி.யு அமைப்பிற்கும் தெரியப்படுத்தி உள்ளோம். தொழிற்சாலையில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், குடும்பங்களின் நலன், ஏற்கனவே சொன்னது போல தமிழ்நாட்டில் வேலை இல்லாமல் இருக்கும் படித்த இளைஞர்களின் எதிர்கால நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு சி.ஐ.டி.யு அமைப்பு இந்த போராட்டத்தை கைவிட வேண்டும் என அரசு சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**கேள்வி:** *பேச்சுவார்த்தை நடத்தி வரும் அதே வேளையில், வீடு புகுந்து தொழிலாளர்களை கைது செய்வதாகவும் எதிர்கட்சிகள் குற்றம்சாட்டி யுள்ளனவே?*



**அமைச்சர் தங்கம் தென்னரசு:**

வீடுபுகுந்து யாரையும் கைது செய்யவில்லை. ஒரு விபத்து நடக்கின்றது. அந்த விபத்து நடந்த இடத்திற்கு அவர்களை காப்பாற்ற பலரும் செல்கிறார்கள். அப்போது சென்ற காவல்துறையோடு சிறு மோதல் போக்கு ஏற்பட்டுள்ளது. அதில் ஈடுபட்டவர்களை மட்டுமே கைது செய்து, உடனடியாக பிணையிலும் வெளிவந்துள்ளார்கள். அரசாங்கம் யாரையும் ரிமேண்ட் செய்யவும் இல்லை, அரசாங்கத்திற்கு அது நோக்கமும் இல்லை. தொழிலாளர்களின் நலனை மதிக்க கூடிய அரசாங்கம் இது. அவர்களை வீடு புகுந்து கைது செய்யப்பட்டது என்பது சரியான கூற்றாக இருக்க முடியாது.

**கேள்வி;** *நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கூறிய செய்தி முற்றிலும் பொய்யானது என்றும், நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு அல்லாமல், சாம்சங் நிறுவனம் சட்டத்தை அமல்படுத்தாமல் சட்டத்தை மீறி நடக்கிறது என்பதே எங்களின் குற்றச்சாட்டு என சி.ஐ.டி.யு அமைப்பு தெரிவித்துள்ளதே?*

**அமைச்சர் தங்கம் தென்னரசு:**

இல்லை. உண்மையான நிலைமை என்னவென்றால், பதிவு செய்வதற்காக முறைப்படி கொடுத்துள்ளார்கள். பதிவு செய்வதில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறைக்கு எந்த பிரச்சனையும் இல்லை. பதிவு செய்த பிறகு சாம்சங் நிறுவனம் அவர்களின் எதிர்ப்பை பதிவு செய்கிறார்கள். அந்த எதிர்ப்பை தெரிவிக்கும் போது அது தொடர்பான விளக்கங்களை கேட்கும் போது அதற்கும் பதில் தந்துள்ளார்கள். அவை அனைத்திற்கும் தேதி வாரியாக எங்களிடம் ஆதாரம் இருக்கின்றன. 02.07.2024 அன்று பதிவு செய்ய மனு கொடுப்படுகிறது. 08.07.2024 அன்று இணை ஆணையர் அந்த மனுவை டி.சி.எல் க்கு அனுப்புகிறார். 19.07.2024 தேதியில் கோரிக்கையில் சில குளறுபடிகள் இருப்பதாக அறியப்படுகிறது. 20.08.2024 ஆம் தேதியில் சாம்சங் நிறுவனம் சார்பில் எதிர்ப்பை தெரிவிக்கும் போது, இணை ஆணையர் அதை 28.08.2024 ஆம் தேதி அன்று டி.சி.எல்க்கு தெரியப்படுத்துகிறார். 03.09.2024 அன்று டி.சி.எல் அதை சி.ஐ.டி.யு விற்கு அனுப்புகிறார். அதற்கான பதிலை சி.ஐ.டி.யு கொடுக்கின்றது. அந்த விளக்கத்தை வாங்கி சாம்சங்க் நிறுவனத்திற்கு கொடுத்த பிறகு, 01.10.2024 அன்று சாம்சங் நிறுவனம் அதற்கான பதிலை கொடுக்கிறார்கள். இதற்கு இடையில் சி.ஐ.டி.யு அமைப்பு 30.09.2024 அன்று நீதிமன்றம் சென்று வழக்கு தொடுக்கிறார்கள். இதையெல்லாம் அரசு சட்டத்திற்கு உட்பட்டு சரியாக செய்யும் போது அதற்குள்ளாக சி.ஐ.டி.யு நீதிமன்றம் சென்றதால் தற்போது அதில் நாம் எதுவும் செய்ய முடியாது. நீதிமன்றத்தின் முடிவை நிச்சயம் தொழிலாளர் நலத்துறை நிறைவேற்றும்.

**கேள்வி;** *வேறு மாநிலத்திற்கு சாம்சங் நிறுவனம் போவதாக செய்திகள் வெளியாகிவுள்ளனவே?*

**அமைச்சர் தங்கம் தென்னரசு;**

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு உகந்த சூழ்நிலை உள்ளது. வரும் நாட்களில் மேலும் ஏறத்தாழ 38 ஆயிரம் கோடி அளவிற்கு முதலீடுகள் வருகிறது. முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக தமிழகம் இருக்கிறது. முதலமைச்சர் இந்த விவகாரத்தை அரசியலாக பார்க்கவில்லை. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வர வேண்டும், தமிழ்நாட்டை நோக்கி பல நிறுவனம் வரும் போது அதிக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தான் சிந்திக்கிறார். முதல்வரின் தலைமையிலான இந்த அரசு, தொழிலாளர்களின் உரிமைகளையும் நலனையும் பாதுகாக்கும் அரசாக தான் இருக்கின்றது. அதே வேளையில் தொழிற்சாலைகளும் மனநிம்மதியுடன் தொழிலை நடத்தும் உகந்த சூழலை உருவாக்கும் கடமையும் பொறுப்பும் இந்த அரசிற்கு உள்ளது.

**கேள்வி;** *அரசிற்கு நெருக்கடியான சூழலை சி.ஐ.டி.யு அமைப்பு ஏற்படுத்துகிறதா?*

**அமைச்சர் தங்கம் தென்னரசு;**

நிச்சயமாக எந்த நெருக்கடியும் இல்லை. தமிழ்நாடு அரசு, இதை அரசியலாக பார்க்கவில்லை. சி.ஐ.டி.யு விற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே எந்த விரோதமும் இல்லை. அவர்களை விரோதபோக்காகவும் இந்த அரசு பார்க்கவில்லை. ஒரு கோரிக்கையை சொல்கிறார்கள், அதை நிறைவேற்ற அரசு பேச்சுவார்த்தையை நடத்திக்கொண்டிருக்கிறது. அந்த கோரிக்கை நீதிமன்றத்தில் இருப்பதனால், நீதிமன்றம் ஒரு முடிவை சொன்னவுடன் அதை இந்த அரசாங்கம் நிறைவேற்ற தயாராக உள்ளது.

**கேள்வி;** *போராட்டத்தில் ஈடுபடுபவர்களை காவல்துறை ஒடுக்க நினைக்கிறதே?*

**அமைச்சர் தங்கம் தென்னரசு;**

தற்பொழுதும் சுங்குவார்சத்திரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திகொண்டு தான் இருக்கிறார்கள். காவல்துறை யாரையும் ரிமாண்ட் செய்யவில்லை. அனுமதி இல்லாமல் போராட்டம் நடத்தும் போது அனைத்து நபர்களுக்கும் ஒரு மாவட்ட நிர்வாகம் என்ன செய்யுமோ அதை தான் தற்போதும் செய்துள்ளார்கள். எந்த வகையான அடக்குமுறைகளையும் இந்த அரசு எப்போதும் செய்யாது.

**கேள்வி;** *சி.ஐ.டி.யு சங்கத்திற்கு மட்டும் தான் இந்த எதிர்ப்பா?*

**அமைச்சர் தங்கம் தென்னரசு;**

அந்த பகுதியில் பல நிறுவனங்களில் சங்கத்தை பதிவு செய்திருக்கிறோம். தொழிலாளர் நலத்துறை ஒன்றும் தொழிற்சங்கங்களை பதிவு செய்வதற்கு எதிராக இல்லை. இந்த நிறுவனத்தில் சி.ஐ.டி.யு கொடுக்கும் போது அதற்கு ஆட்சேபனை என்பது நிறுவனத்திடம் இருந்து வருகிறது. அந்த ஆட்சேபனை குறித்து விசாரிக்கும் பொறுப்பும் தொழிலாளர் நலத்துறைக்கு தான் உள்ளது. சி.ஐ.டி.யு சார்ந்து இயங்கும் பல சங்கங்களுக்கும் அந்த பகுதியில் உள்ள பல்வேறு நிறுவனங்களிலும் ஏற்கனவே பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்ப்பதில் அரசு தெளிவாக இருக்கிறது. அப்படி பேச்சுவார்த்தையின் போது அமைச்சர்கள் திறந்த மனதுடன் ஈடுபட்ட காரணத்தினால், பெரும்பாலான கோரிக்கைகளை சாம்சங் நிறுவனம் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்திற்கு தயாராக உள்ளது. ஒரே ஒரு கோரிக்கை மட்டும் நீதிமன்ற விவகாரத்தில் இருப்பதால், அந்த தீர்ப்பின் அடிப்படையில் தான் முடிவை எட்ட முடியும்.

முதல்வரும் அரசாங்கமும் இந்த விவகாரத்தில் எவ்வளவு அக்கறையுடன் செயல்படுகிறது என்பதை சி.ஐ.டி.யு வினர் நன்கு அறிவார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் நலன், ஆகியவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, சி.ஐ.டி.யு அமைப்பு அன்பு கூர்ந்து இந்த போராட்டத்தை விலக்கிகொண்டு, நீதிமன்ற தீர்ப்பு வந்த பிறகு அதை செயல்படுத்தலாம் என்ற தமிழ்நாட்டு அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.

---

## உள்ளாட்சித் தேர்தல் குறித்து

# முதலமைச்சர் தான் முடிவு செய்ய வேண்டும்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

*புதுக்கோட்டை, அக்.11 -*

*புதுக்கோட்டை மாநகராட்சியின் முதல் மேயராக திலகவதி செந்தில் பதவி ஏற்பு.*

*புதுக்கோட்டையில் 145 கோடி மதிப்பிலான திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் கே.என்.நேரு.*



*நூற்றாண்டு கண்ட புதுக்கோட்டை நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தி தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டது. அதன்படி புதுக்கோட்டை மாநகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநகராட்சியின் முதல் மேயராகவும், பெண் மேயராகவும் திலகவதி செந்தில் பதவி ஏற்றுக்கொண்டார். துணை மேயராக லியாகத் அலி மற்றும் மாமன்ற உறுப்பினர்களும் பதவி ஏற்று கொண்டனர்.*

*இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஆகியோர் பங்கேற்று மாநகராட்சி மேயருக்கு அங்கி, 5.1/4 அடி உயரம் கொண்ட செங்கோல், 51 பவுன் தங்கச் சங்கிலியை வழங்கினர்.*

*இதனைத் தொடர்ந்து மாமன்ற கூட்ட இருக்கையில் மேயர் திலகவதி செந்திலை அமர வைத்து, கூட்டத்தை அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்.*

*முன்னதாக புதுக்கோட்டையில் 101.34 கோடியில் பாதாள சாக்கடை திட்டம், புதிய பேருந்து நிலையம் கட்ட 18.90 கோடியில் அடிக்கல் நாட்டு விழா, ஐந்து வார்டுகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணிக்கு 25. 31 கோடியில் அடிக்கல் நாட்டினார்.*

*இதனைத் தொடர்ந்து புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் பதவியேற்பு விழாவில் 145 கோடி மதிப்பிலான திட்ட பணிகளை தொடங்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் கே.என். நேரு,*

*வடகிழக்கு பருவமழையை ஒட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துறை சார்ந்த அதிகாரியுடன் ஆலோசனை நடத்தி, என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளார்.*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் எந்தெந்த பணிகள் தாமதமாக உள்ளது, தாமதத்திற்கு என்ன காரணம், என்பது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.*

*தமிழக முழுவதும் உள்ள நகர் பகுதிகளில் வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டு ஆகாயத்தாமரை அகற்றப்பட்டுள்ளது. எந்த நிலையிலும் பருவமழையை எதிர்கொள்ள வேண்டிய தயார் நிலையில் நகராட்சி நிர்வாகம் உள்ளது.*

*மழை பாதிப்புகள் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கும், சேதமடைந்த மரங்களை அகற்றுவதற்கும், உணவு தயாரிப்பதற்கும் ஒரே இடங்களில் இல்லாமல் பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பால் போன்ற அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.*

*உள்ளாட்சித் தேர்தல் குறித்து முதலமைச்சர் தான் முடிவு செய்ய வேண்டும். அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.*

*கடந்தாண்டு வடகிழக்கு பருவமழைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சரியாக பயன்படுத்தவில்லை என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டிற்கு பதில் அளித்த அவர், எதிர்க்கட்சிகள் என்றுமே நன்றாக பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக கூற மாட்டார்கள். திட்டமிட்டபடி அனைத்து பணிகளும் முறையாக நடந்து கொண்டிருக்கிறது. வடகிழக்கு பருவமழை பெய்யும் போது மழைநீர் தேங்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*இயற்கையின் சீற்றம் அதிகமாக இருக்கும் போது, அதற்குத் தேவையான உபகரணங்களும் தயாராக உள்ளது.*

*திருநெல்வேலிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டது குறித்த கேள்விக்கு, கட்சி எந்த பணி கொடுக்கிறதோ அந்த வேலையை செய்யப் போகிறேன் என பதிலளித்தார்.*

*புதுக்கோட்டையை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால், அதனால் உயர்த்தப்படும் வரி உயர்வு ஏழை மக்களை பாதிக்காது. 1200 சதுர அடிக்கு மேல் கட்டடம் கட்டுபவர்களுக்கு மட்டும் தான் 40% வரி உயரும் என்று கூறினார்.*


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தகவல் தொழில்நுட்ப மையம்**

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 / 2733 / 2024

**குறுகிய மின் ஒப்பந்தப்புள்ளிகள்**

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் முதுநிலை முறை மேலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Development of Cloud - Based Attendance Management System for NULM Staff and Management of GCC officials Inspection & Fine Details using Cloud Infrastructure for a period one year- க்கான ஒப்பம்.

| | |
|---|---|
| பணியின் மதிப்புத் தொகை ரூ.98,95,482/- | ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ.98,955/- |

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 23.10.2024 அன்று பிற்பகல் 3.00 மணி.

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 24.10.2024 அன்று பிற்பகல் 3.15 மணி

செ.ம.தொ.இ / 4205 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**முதுநிலை முறை மேலாளர்**




தர்மபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியம் ஜக்கச்சத்திரம் மற்றும் அனுமந்தபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி விலையில்லா மிதி வண்டி வழங்கும் நிகழ்ச்சி கழக மேற்கு ஒன்றிய செயலாளார் வழக்கறிஞர் எம்.வி.டி.கோபால் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பதினொன்றாம் வகுப்பு படிக்கும் 496 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டியினை வழங்கினார்.உடன் மாநில விவசாய அணி துணைத் செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, மத்திய ஒன்றிய செயலாளர் முனியப்பன்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் பாலகிருஷ்ணன்,பலராமன்,முனுசாமி, முனிராஜ்,தலைமை ஆசிரியர், ஆசிரியைகள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கோவில் புரையூர் மதுரா மோட்டூரில் ரூ 34.60 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாமக்கல் பி.குப்புசாமி
### அக்டோபர் 11 (2002)



**இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**